**தம்பி மாமுனா லெப்பை பரம்பரை முஹம்மது லெப்பை புதல்வர் மஹ்மூது அவர்கள் எழுதிய**

# இலாமுல் பவாயித் - பீ- நிலாமுல் அகாயித்

## முன்மொழி

சர்வ புகழும் எல்லாம் வல்ல இறைவனாகிய ரப்புல் ஆலமீனுக்கு உரியதாகும். சிருஷ்டிகள் யாவையும் உண்டாக்கி, அவை கடைத்தேறுவதற்கான அறநெறியையும் வகுத்துக் காட்டி, அதன்படி நடக்குமாறு பணித்த எங்கள் இறைவனே, உன்னைப் போற்றித் துதிக்கிறோம்.

நம் பெருமான் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கும், அவர்களின் நல் தோழர்களுக்கும் ஸலவாத்தும், ஸலாமும் உண்டாவதாக!

முஸ்லிம்கள் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத கடமையான இஃதிகாத் எனும் சித்தாந்தங்களையும், கொள்கை கோட்பாடுகளையும், நல்ல அமல்களென்ற அனுஷ்டானங்களையும் விளக்கி வைக்கும் நோக்குடன் இச் சிறிய நூலை எழுதத் துணிந்துள்ளேன்.

இதை எழுதுவதற்கு இமாம் கஸ்ஸாலீ, இமாம் நவவீ, முஹம்மது முஹ்யித்தீன் இப்னு அரபிஇ அப்துல் கரீம் ஜீலி, முஹம்மதிப்னு பழ்லுல்லாஹ், அஹ்மதுல் குஷ்ஷாரி போன்ற ஞானப் பெரியார்கள் எழுதியுள்ள நூற்களை ஆதாரமாகக் கொண்டுள்ளேன். இதற்கு இலாமுல் பவாயித் -பீ- நிலாமுல் அகாயித் என்று நாமம் சூட்டியுள்ளேன்.

இதைக் கற்பவர்கள் தமது அன்றாட அனுஷ்டானங்களில் சம்பூரணமான சன்மார்க்க நடத்தையுள்ளவர்களாகி அல்லாஹ்வின் அன்புக்குரிய அடியார்கள் கூட்டத்தில் சேர்ந்தவர்களாகுமாறு அந்த ரப்புல் ஆலமீன் கருணை புரிவானாக! ஆமீன்.

### 1. இஸ்லாமும் அதன் அடிப்படையும்:

“நிச்சயமாக, அல்லாஹ் உங்களுக்கு ஒரு மார்க்கத்தைத் தெரிந்தெடுத்துத் தந்துள்ளான். எனவேஇ நீங்கள் அந்த (மார்க்கமாகிய) இஸ்லாமிலாகாது மரிக்க வேண்டாம் என்று திருக்குர்ஆனிலும், “மார்க்கத்தின் முதல் கடமை இறைவனை அறிவதாயிருக்கிறது“ என்று ஹதீது ஷரீபிலும் கூறப்பட்டுள்ளதற்கொப்ப இஸ்லாமிலாகி, அதன் ஏவல், விலக்கல்களை ஏற்று ஒழுகி, இறைவனை அவனுக்குரிய சம்பூரணமான தன்மைப்படி அறிந்து கொள்ள முயல வேண்டும். இறைவன் ஒருவன், ஏகன், தனித்தவன் என்பதை பூரணமாக ஏற்றுக் குறைபாட்டுக்கு இடமின்றி அனுஷ்டானஞ் செய்வதையே அல்லாஹ்வும் அவன் ரஸூலும் வற்புறுத்தியுள்ளார்கள். ஆகையால் ஏகத்துவம் (தௌஹீது) அதை உணர்ந்து உறுதி கொள்ளல் (ஈமான்), ஏவல் விலக்கல்களின்படி நடத்தல் (இஸ்லாம்), அதன் மூலம் இறைவனைச் சரியாக அறிந்து கொள்ளுதல் (மஃரிபா) ஆகிய இந்த நான்கும் தீன் என்னும் மண்டபத்தைத் தாங்கி நிற்கின்ற தூண்களாகும். “இஸ்லாமல்லாத வேறொரு மார்க்கத்தை தேடிக் கொள்பவனிடமிருந்து அவனுடைய வேண்டுதல் எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. மேலும், அவன் மறுமையில் நஷ்டமடைந்தவனாவான்.“

இஸ்லாம்: நமக்கென இறைவன் தேர்ந்தெடுத்துத் தந்துள்ள மார்க்கம் இஸ்லாமன்றோ! அதன்படி நாம் செய்ய வேண்டுவன என்று இடப்பட்டுள்ள கட்டளைகளையும், தவிர்க்க வேண்டுபவை என்றுள்ள விலக்கல்களையும் ஏற்று அதற்கேற்ப ஒழுகி வருவதுதான் இஸ்லாம் ஆகும். இறைவன் ஒருவன் என்பதை நாவால் சொல்லுவதுடன் உறுதியாக இதயத்தில் இருத்தவும் வேண்டும். இஸ்லாத்தின் ஏவல்களான கட்டளைகள் கலிமா, தொழுகை, ஜகாத், நோன்பு, ஹஜ்ஜு என ஐந்து ஆகும்.

"இறைவன் ஒருவன், அவன் தனித்தவன், அவனே வணக்கத்துக்கு உரியவன் என்றும், முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நிச்சயமாக அவனது திருத்தூதர் என்றும் சாட்சி பகர்வதும், தொழுவதும், ஜகாத்துக் கொடுப்பதும், ரமலான் மாத நோன்பு நோற்பதும், சக்தி படைத்திருந்தால் திருமக்காவுக்குச் சென்று ஹஜ்ஜு செய்வதும் இஸ்லாமாகும்" என்று ஹதீதில் கூறப்பட்டுள்ளது.

ஈமான்: முதலாவதாக அல்லாஹ் ஒருவனே, தனித்தவனே, ஏகமானவனே என்று உறுதியோடு, உளப்பூர்வமாக ஏற்றுக் கொள்வது யாதெனில், ஆதி அந்தமில்லாவனாய், அழிவில்லாதவனாய், உலகின் எப்பொருளினது தேவையுமில்லாதவனாய், தன்னந்தனியாய் இருப்பவன் இறைவன் என்று உணர்வதாகும். இறைவனின் இந்த ஏகத்துவமெனும் தௌஹீதை இமாம் கஸ்ஸாலீ ரஹிமஹுல்லாஹ் அவர்கள், இறைவனின் (வுஜூது) உள்ளமையை அறிதல், அவன் அனாதியானவனென்றும், அழிவற்றவன் என்றும், உற்பத்திக்கு மூலமான அணுவானவனுமல்லன், பல அணுக்கள் சேர்ந்த சடத்துவக் கண்ணுக்குப் புலனாகம் பொருளானவனுமல்லன் என்றும், வேறொரு பொருள் தொக்கி நிற்கும் (அர்ளு) சடப் பொருளானவனுமல்லன் என்றும், அங்கு, இங்கு என்று சுட்டிக் காட்டப்பட முடியாதவன் என்றும், தன் நாட்டப்படியே அர்ஷில் நிலைகொண்டவன் என்றும், இன்ன ரூபத்திலுள்ளான், இன்ன நிலையிலுள்ளான் என்று இல்லாமலிருந்தும், மறுமையில் சிருஷ்டிகளால் தரிசிக்கப்படக்கூடியவன் என்றும், ஒப்பு, உவமையற்ற ஏகன் என்றும் பத்துப் பகுதிகளாகப் பிரித்துக் காட்டியுள்ளான்.

இரண்டாவதாக, இறைவனின் ஏகத்துவத்தை உணர்வதோடு, அவனுடைய கல்யாண குணங்களையும் அறிந்து கொள்ள வேண்டும். அல்லாஹ் தனக்குள்ள ஜீவனோடு என்றுமிருப்பவன், தன் அறிவால் அறிபவன், தன் நாட்டத்தால் நாடுபவன், தன் சொந்த சக்தியால் அடக்கியாள்பவன், தன் பார்வையாலே பார்ப்பவன், தன் உணர்வாலேயே கேட்பவன், தன் சக்தியாலேயே பேசுபவன் என்று உணர வேண்டும். இறைவனின் கல்யாண குணங்களை இமாம் கஸ்ஸாலீ ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கீழ்க்கண்ட பத்துப் பெயர்களாக தருகிறார்கள்: நிரந்தரமான ஆயுள்ளவன், அறிவுள்ளவன், செயல்புரியத் தானே நாடுபவன்இ சகல சக்தியையும் தன்னுள் அடக்கி வைத்துள்ளவன், கேள்வியும் பார்வையும் (ஸமீஉ, பஸீர்) உள்ளவன், ஓசையும் எழுத்துமின்றிப் பேசக்கூடியவன், தன் வார்த்தைகளுக்கு ஆதியும் அந்தமுமில்லாதவன், அதுபோன்றே தன் ஞானத்திலும் ஆரம்பமும் முடிவுமற்றவன், தன் ஜீவனைக் கொண்டு உயிர்த்திருப்பவன், தன் அறிவால் அறிபவன் - தானே நாடுபவன் - தானே நிலைபெற்றவன் - தன் உணர்வால் கேட்பவன் - தன் அறிவால் பார்ப்பவன் - தன் வார்த்தையால் பேசுபவன். (இதன் விவரமாவது:

உயிரின்றியே ஜீவிப்பவன், கல்வியின்றியே அறிவுள்ளவன், செவியின்றியே கேட்பவன், கண்ணின்றியே பார்ப்பவன், வாயின்றியே பேசுபவன்).

மூன்றாவதாக, இறைவனின் செயல்களில் நம்பிக்கை கொள்ள வேண்டும். அஃதாவது சிருஷ்டிப்பவன், காப்பாற்றுபவன், ஜீவனளிப்பவன், மரணிக்கச் செய்பவன், நேர்வழி காட்டுபவன், வழி கெடுப்பவன், சுகமளிப்பவன், தண்டனையளிப்பவன் மற்றும் இன்னோரன்ன இறைவனின் செயல்களை அறிந்து உறுதி பூண வேண்டும். இதை இமாம் கஸ்ஸாலீ ரஹிமஹுல்லாஹ் அவர்கள் பத்துப் பிரிவுகளாக வகுக்கிறார்கள். அவையாவன: 1. உலகில் உண்டாக்கப்படுபவை யாவும் இறைவனுடைய செயலாலும் சிருஷ்டித் திறனாலுமே உண்டானவையாகும் என்று உணருதல் 2. சிருஷ்டிக்கப்பட்ட சகல வஸ்துக்களுடையவும் ஆட்டம் அசைவுயாவும் அவனுடைய நாட்டத்தாலேயே நிகழ்கின்றன என்று உணருதல். 3. இந்தச் சக்தி அடியார்களின் இயல்பிலேயே அடங்கிக் கிடக்கிறது. எனினும்இ இவ்விதமுள்ள சக்தியும் இறைவனின் இராதத் எனும் நாட்டத்துக்கு அப்பாற்பட்டதன்று என்று உணர்ந்து உறுதி கொள்ளுதல். இம்மூன்று நிலைகளும் மாறும் தலங்கள் (மன்ஜிலத்துல் அக்தாம்) என்று வழங்கப்படுகின்றன. ஏனெனில், இம்மூன்று அம்சங்களும் வேறு என்றிலிருந்து பெறப்பட்டவையாதலால் இவை மாறவும் கூடும். இந்த அடிப்படையில் ஜனங்களும் மூன்று பிரிவினர்களாகப் பிரிந்திருக்கின்றனர். முதலாவது பிரிவினர் அடியார்களின் நன்மை தீமையான செயல்கள் யாவும் இறைவனின் நாட்டத்தால் நடப்பவைதாம். அவற்றிற்கும் அடியார்களுக்கும் யாதொரு தொடர்புமில்லை. அடியார்களுக்கு அவற்றின் மீது எவ்விதச் சக்தியுமில்லை என்று கூறுகின்றனர். இவர்களை “ஜபரிய்யா“ என்பர். இரண்டாவது பிரிவினர், அடியார்களால் செய்யப்படும் செயல்கள் யாவும் அவர்களாலேயே அவர்களின் திறமையாலேயே செய்யப்படுகின்றன. இவற்றில் இறைவனின் நாட்டம் சம்பந்தப்படவில்லை. இவற்றின் பலாபலன் முழுமையும் அடியார்களையே சாரும் என்று கூறுகின்றனர். இவர்களைக் “கத்ரிய்யா“ என்பர். மூன்றாவது பிரிவினர்இ அடியார்களின் செயல்கள் யாவும் இறைவனின் நாட்டப்படியே நடக்கின்றனவாயினும் அடியார்களுக்கும் அவற்றில் சம்பந்தமுண்டு. அவற்றில் பலாபலனிலும் அடியார்களுக்குப் பங்குண்டு என்று கூறுகின்றனர். இவர்கள்தான் “அஹ்லுஸ் ஸுன்னத்“ என்ற ஸுன்னத் வல் ஜமாஅத்தினர்களாவர். 4. அடியார்களை நன்மையைக் கொண்டு ஏவுவதும், தீமையைக் கொண்டு விலக்குவதும் இறைவனால் ஆகக் கூடியதுதான். ஆனால் இதை அவன் நாடினால் செய்யலாம். நாடாவிட்டால் செய்யாதிருக்கலாம். இது அவன் மீது விதியானதன்று என்று உணர்ந்து உறுதி கொள்ளல். 5. அல்லாஹ் நாடினால் அவன் தன் அடியார்களால் செய்ய இயலாத காரியங்களையும் செய்யுமாறு அவர்களை ஏவலாம். ஆனால், இறைவன் அவ்வாறு ஏவுவதில்லை என்று உணர்தல். 6. தன் சிருஷ்டிகளின் மீது குற்றமில்லாவிடினும் கூட அவன்களை தண்டிக்கும் அதிகாரமும் இறைவனுக்கு உண்டென்றும், அவன் யாரையும் அவ்வாறு வண்டிப்பதில்லை என்று உணர்தல். 7. தன் அடியார்களுக்கு இறைவன் தான் நாடிய எதையும் செய்யலாம். எந்நிலையிலும் அவர்களுக்கு நன்மையானதைத்தான் செய்ய வேண்டுமென்ற கட்டாயமில்லை என்று உணர்தல். 8. இறைவனை அறிவதும், அவன் ஏவல் விலக்கல்களின்படி ஒழுகுவதும், அவன் ஆணைக்கு அடிபணிந்து தான் என்பதையும் உணர்தல். 9. தனது திருத்தூதர்களை அனுப்புவதும் நிச்சயமாக அவனால் ஆகுமானதே. ஆகாததன்று என்று ஒப்புக் கொள்ளுதல். 10. நமது நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு

அலைஹி வஸல்லம் அவர்களை நிச்சயமாக அவன் தன் இறுதித்தூதராக அனுப்பியுள்ளான். அவர்களை அனுப்புவதற்கு முன்னிருந்த மார்க்கங்களை எல்லாம் அவர்கள் மூலம் ஒழுங்குப்படுத்திக் கொடுத்துள்ளான் என்று ஒப்புக் கொள்ளுதல்.

அல்லாஹ் ஒருவனே. தனித்தவனே என்பதை அறிவதுடன், அவனுடைய கல்யாணக் குணங்களையும் அறிந்து கொண்டு, அவன் செயல்களில் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்று மேலே சொன்னோம். இவற்றுடன் நான்காவதாக நபிமார்கள் உண்டு என்று உறுதியான நம்பிக்கை கொள்வதும் அவசியமாகும். அத்துடன் கப்ரின் வேதனைகள்இ கேள்வி கணக்குகள், மரித்தபின் எழுப்பப்படல், சுவக்கம், நரகம் ஆகியவை உண்டென்றும் நம்பிக்கை கொள்ள வேண்டும்.

இதையும் இமாம் கஸ்ஸாலீ ரஹிமஹுல்லாஹ் அவர்கள் பத்துத் தலைப்புகளில் விவரித்துள்ளார்கள். அவையாவன: 1. முன்கர் நகீர் கேள்வி கேட்பது உண்டென்றும்இ 2. கப்ரின் வேதனை உண்டென்றும் 3. இறந்தபின் எழுப்பப்படுதல் உண்டென்றும்4. நன்மை, தீமையை நிறுத்துக் கூலி கொடுக்கப்படுதல் உண்டென்றும் 5. ஸிராத்துல் முஸ்தகீம் பாலத்தைக் கடக்க வேண்டியது உண்டென்றும் 6. சுவர்க்கம் நரகம் உண்டென்றும் உணர வேண்டும். 7. அபூபக்கர், உமர், உதுமான், அலீ ஆகிய நால்வரையும் நம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பின் அடுத்தடுத்து வந்த இமாம்களாக ஒப்புக் கொள்ள வேண்டும். 8. இந்நான்கு கலீபாக்களுக்கும் உண்மையாகவே தனிப்பட்ட சிறப்பு (மர்த்தபா) அளிக்கப்பட்டிருப்பதை உணர வேண்டும். 9. இமாம் ஆவதற்கான கீழ்க்கண்ட எட்டு யோக்கியதாம்ஸங்களையும் அறிய வேண்டும். அவை: அ) முஸ்லிமாயும் ஆ) புத்தி சுவாதீனமானவராயும் இ) வயது வந்தவராயும் ஈ) ஆணாயும் உ) பேணுதலுள்ளவராயும் ஊ) கல்வி ஞானமுடையவராகவும் எ) வீரதீரமுடையவராயும் ஏ) குறைஷிக் குலத்தினராயும் இருக்க வேண்டும். இந்த எட்டு இலக்கணங்களும் உள்ளவர்களே இமாமாக வரலாம். இத்தகையவரை கலீபாவாக ஏற்பது வாஜிபான கடமையாகும். 10. இந்த எட்டு இலக்கணங்களும் இல்லாமலிருப்பவரான ஒருவரைப் பதவியை விட்டு அகற்றுவது இயலாததாய் இருந்தால் அவருக்கு கீழ்ப்படிவதும் கூடும்.

எனவே மேலே விவரித்த நான்கு மூலாதார அடிப்படைகளைக் கொண்ட நாற்பது விஷயங்களிலும் உறுதிகொண்டு ஏற்றுக் கொள்வது ஈமான் என்ற நம்பிக்கையாகும். இவைகளை ஏற்றுக் கொண்டவனே நேர்வழியில் நடப்பவனாவான். ஏற்றுக் கொள்ளாதவன் வழி கெட்டவனே. இந்த நாற்பது விஷயங்களையும் அப்படியே ஏற்றுக் கொள்ளாதவர்கள் ராபீஜீ, காரீஜீ, ஜபரிய்யா, கத்ரிய்யா, முஅத்தலஆ, முஷப்பஹா என ஆறு பிரிவுகளுள் ஆகியுள்ளனர். இந்த ஆறு பிரிவுகளுள்ளும் தலா ஒவ்வொன்றிலும் பன்னிரண்டு உட்பிரிவுகள் உள்ளன. எனவே, இவை மொத்தம் எழுத்திரண்டு உட்புரிவுகளாகும். எனவேதான், “என் உம்மத்துகள் எழுபத்து மூன்று பிரிவினராகப் பிரிவார்கள். அவர்களுள் 72 பிரிவினர் நரகத்தையும், ஒரு பிரிவினர் மட்டும் சுவர்க்கத்தையும் அடைவார்கள்“ என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தீர்க்கதரிசனம் கூறியுள்ளார்கள்.

**தொழுகை:** ஈமானுக்கு அடுத்தபடியாக நாம் கவனிக்க வேண்டுவது தொழுகையாகும். தினமும் ஐந்து வேளைத் தொழுவது பர்ளான கடமையாக ஆக்கப்பட்டுள்ளது. தொழுகைக்கு

மூன்று அடிப்படை மூலாதாரங்கள் (ருக்னு) உண்டு. இந்த மூன்று அடிப்படையிலுமாக மொத்தம் பத்தொன்பது உட்பிரிவுகளான ருக்னுகள் உண்டு.

முதலாவது அடிப்படை மூலாதாரம் "கல்பிய்யா" என்பது. அஃதாவது மனத்தால் தொழுகைக்கு நிச்சயம் செய்து கொள்ளுதல் (நிய்யத்) இது கீழே கண்ட மூன்று உட்பிரிவுகளைக் கொண்டது. 1. தஅர்ருல் -பர்ளை பர்ளு என்றும் அதாவை அதாவென்றும், கலாவை கலாவென்றும் நிய்யத் செய்ய வேண்டும். 2. தொழுகையில் இமாம் தம்மை இமாம் என்றும், பின்னால் நிற்பவர்கள் தம்மை முக்ததி என்றும் நிய்யத் செய்து கொள்ள வேண்டும். 3. தஅய்யின் - இன்னின்ன நேரத்தின் இன்னின்ன தொழுகை என்று குறித்தலும் வேண்டும். இம்மூன்றும் கூடியதே நிய்யத்து ஆகும். அந்த நிய்யத்தின் ஆரம்ப ஸ்தானம் கல்பு, அதற்குரிய நேரம் அல்லாஹு அக்பர் என்ற சொல்லிலுள்ள "அ" நாவில் எழும்போதேயாகும். அதாவது தக்பீர் சொல்வதற்குச் சற்று முன்னமேயே தொழுகையின் தத்துவார்த்தத்தையும், சிறப்பையும் மனத்தில் நிறுத்தி இன்ன நேரத்தின் இன்ன தொழுகை இத்தனை ரக்அத்துகள் என்று குறித்து "அல்லாஹு அக்பர்" என்று கூற நாவை எழுப்புகையில் உண்டாகும் "அ" என்ற ஓசையுடன் அதை லயிக்கும்படி கூறுவதாகும்.

தொழுகையின் இரண்டாவது அடிப்படை மூலாதாரமாவது "கவ்லிய்யா" என்பது. அதாவது ஓதுவது முதலிய வார்த்தைகள் சம்பந்தப்பட்டது. இதில் ஐந்து உட்பிரிவுகள் உண்டு. அவையாவன: 1) அல்லாஹு அக்பர் என்ற தக்பீர் 2) ஸூரத்துல் பாத்திஹா, ஸூரா 3) இரண்டாம் இருப்பில் அத்தஹியாத் 4) தரூது ஸலவாத்து 5) ஸலாம் சொல்வது.

தொழுகையின் மூன்றாவது அடிப்படை "பிஃலிய்யா" என்பதாகும். அதாவது, தொழுகையில் உண்டான செயல் முறைகள் இன்னின்ன என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். அவை கீழே கண்ட உட்பிரிவுகளாகக் கணிக்கப்பட்டுள்ளன. தொழுகையில் நிற்பது, ருகூவுக்குக் குனிவது முதல் இருப்பு, சிறுநிலை, ஸுஜூது, நடு இருப்பு பின் ஸுஜூது, அத்தஹயாத்.

எனவே, தொழுகையில் கல்பியா, கௌலிய்யா, பிஃலிய்யா ஆகிய மூன்று ருக்னுகளிலுமாகச் சேர்ந்து மொத்தம் பத்தொன்பது உட்பிரிவுகள் உள்ளன என்பது பெறப்பட்டது.

ஜகாத்: ஆண்டில் ஒருமுறை நிறைவேற்ற வேண்டிய இக்கடமையில் இரண்டு விஷயங்கள் கவனிக்கப்பட வேண்டும். 1. தன்மீது கடமையான ஏழை வரியைக் கொடுப்பதாக நிய்யத்துச் செய்து கொண்டு கொடுக்க வேண்டும். 2. ஜகாத்தை வாங்க அருகதையும் உரிமையும் உள்ளவர்களுக்கு கொடுக்க வேண்டும்.

நோன்பு: வருஷத்தில் ஒரு மாதம் - ரமலான் மாதம் முழுமையும் நோன்பு பிடிப்பது கடமையாகும். இதிலும் இரண்டு விஷயங்கள் முக்கியமானவை. அவை: 1) கடமையாக்கப்பட்ட நோன்பை நோற்பதாக நிய்யத்துச் செய்வது. 2) நோன்பை முறிக்கும்படியான செயல்களை விட்டு விலகிக் கொள்வதுமாகும்.

ஹஜ்ஜு: வயது வந்த, சக்தியுள்ள ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் ஆயுளில் ஒருமுறை மக்காவுக்குச் சென்று ஹஜ்ஜு செய்வது கடமையாகும். ஹஜ்ஜுக்கு ஐந்து ருக்னுகள் உண்டு. அவை: 1) இஹ்ராம் கட்டுதல் 2) அரஃபா மைதானத்தில் தங்குதல் 3)

க.்.பத்துல்லாவை ஏழு தடவை சுற்றி வருதல்(தவாப்) 4) சபா, மர்வா குன்றுகளுக்கிடையில் தொங்கோட்டம் ஓடுதல். 5) தலை முடியை இறக்கிக் கொள்ளுதல் ஆகியவையாகும்.

2. **ஈமான் விளக்கம்**

"திருத்தூதர் உங்களுக்கு கொண்டு வந்ததை எடுத்துக் கொள்ளுங்கள்" அவர் விலக்கியவற்றை விட்டு விடுங்கள்" என்ற திருக்குர்ஆன் வசனத்திற்கேற்ப நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எவையெவைகளை அடியார்கள் கடைபிடிக்க வேண்டுமென்று ஆணையிட்டார்களோ அவை அனைத்தும் உண்மையென ஏற்றுக் கொள்வதே ஈமானாகும். "இறைவனையும், மலக்குகளையும், நபிமார்களையும், வேதங்களையும், மறுமையையும், நன்மை தீமைகளுக்குக் கூலி அல்லது தண்டனை உண்டென்பதையும் உறுதியாக நம்பி ஒழுகுவதே ஈமான்" என்று திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள ஈமானின் ஆறு அம்சங்களையும் விவரமாய்ப் பார்க்கலாம்.

ஈமானிலுள்ள முதலாவது பகுதிதான் இறைவன் மீது நம்பிக்கை கொள்வது. அதாவது, இறைவன் ஒருவன், அழிவில்லாதவன், சர்வமும் அறிந்தவன், சர்வ சக்தியுமுடையவன், நிலையாயுள்ளவன், சர்வத்தையும் படைப்பவன், ஒப்பு உவமையற்றவன் என்று உறுதி கொள்ள வேண்டும். எனவே, எவனாயினும் இறைன் புதியவன் - ஒரு காலத்தில் இல்லாமலிருந்து இன்னொரு காலத்தில் உண்டாகி விட்டவன் என்று கூறினாலும், இறைவனுடைய அதிமுக்கியமான குணங்களான என்றுமிருப்பது, சர்வமும் அறிவது, சர்வ சக்தியும் படைத்திருப்பதுஇ சர்வத்தையும் பார்க்க முடிவதுஇ கேட்க முடிவது, நாடியதை முடிக்க முடிவது போன்றவற்றில் ஒன்றேனும் அவனிடமில்லை என்று மறுத்தாலும், அவனுக்குத் தகாத நிறம், மணம், கூடுதல், குறைதல்இ ரூபம் போன்ற ஆகாத இயல்புகளை உண்டென்றாலும்இ அவன் ஏவல் விலக்கல்களையோஇ திருநாமங்களையோ இல்லை என்று மறுத்தாலும் காபிராவான்.

ஈமானிலுள்ள இரண்டாவது பகுதிதான் மலக்குகள் உண்டு என்று ஒப்புக் கொள்வதாகும். நிச்சயமாக, மலக்குகள் இறைவனால் படைக்கப்பட்ட அடியார்கள். ஆண், பெண் அல்லது அலி போன்ற எந்தப் பாலினமும் அற்றவர்கள். அவர்களுக்குத் தம்மிச்சையும், தாய் தகப்பனுமில்லை என்று ஒப்புக் கொள்ள வேண்டும். அவர்களுக்குப் பற்பல விதமான வேலைகளுண்டு. அவர்களில் சிலர் அடியார்களுக்குக் காவலாக நிற்கின்றனர். சிலர் அடியார்களின் செயல்களைக் குறித்து வைக்கின்றனர். சிலர் அடியார்களைக் கப்ரில் விசாரிக்கின்றனர். சிலர் இறைவனைச் சூழ்ந்துள்ளனர். சிலர் அர்ஷைச் சுமந்து நிற்கின்றனர். சிலர் ஒளிமயமான பற்பல வடிவங்களில் மாறுபவர்களாய் உள்ளனர். இன்னும் இவைபோன்ற பலவழிகளில் அம்மலக்குகள் இயங்குகின்றனர். ஒருவன் இறைவனுக்கு மலக்குகள் இல்லை என்று கூறினாலும்இ மலக்குகள் இறைவனின் பெண் மகவுகள் என்றாலும் அவர்களைத் திட்டினாலும் அவன் காபிராவான்.

ஈமானிலுள்ள மூன்றாவது பகுதிதான் வேதங்கள் உண்டென ஒப்புக் கொள்ளுதலாகும். அல்லாஹ் தன் திருத்தூதர்களுக்கு அருளியுள்ள வேதங்கள் ஆதியந்தமற்றவை. இறைவனின் திருவசனங்கள் புதிதாகப் படைக்கபட்டவையல்ல என்று உறுதி கொள்ள வேண்டும்.இறைவன் இறக்கித் தந்தவற்றுள் நான்கு பெரிய வேதங்களும்இ நூறு சிறிய

கட்டளைகளும் உண்டு. கட்டளைகளில், பத்துக் கட்டளைகள் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கும், 50 கட்டளைகள் ஷீது அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கும், முப்பது கட்டளைகள் இத்ரீஸ் அலைஹிஸ்ஸாம் அவர்களுக்கும், பத்து கட்டளைகள் இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கும் இறக்கித் தரப்பட்டன. மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்குத் தௌராத்தும், தாவூது அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு ஜபூரும், ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு இன்ஜீலும் நம் பெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் புர்கானும் ஆக நான்கு வேதங்களும் இறக்கியருளப்பட்டன. திருக்குர்ஆனின் மூலம் ஏனைய வேதங்களின் ஆணைகள் எல்லாம் மாற்றப்பட்டு விட்டன. எவனாவதொருவன் வேதங்களை சந்தேகித்தாலும், திருக்குர்ஆனின் எந்த ஒரு வசனத்தையேனும், இறைவனின் வசனமன்று என்று கூறினாலும், திருக்குர்ஆனிலில்லாத வேறொரு வசனத்தை அதில் கொண்டு வந்து நுழைத்தாலும், திருக்குர்ஆனில் ஆகாதென்று கூறப்பட்டதை ஆகுமென்று கூறினாலும், ஆகுமென்று கூறப்பட்டதை ஆகாதென்றாலும், வேண்டுமென்றே திருக்குர்ஆனை அவமரியாதை செய்தாலும் அவன் காபிராவான்.

ஈமானிலுள்ள நான்காம் பகுதிதான் இறைவனின் திருத்தூதர்களை ஒப்புக் கொள்வதாகும். ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தொட்டு நம் பெருமான் முஹம்மது முஸ்தாப ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வரை இவ்வுலகுக்கு அனுப்பப்பட்ட நபிமார்கள் அனைவரும் உண்மையான மார்க்கத்தை ஜனங்களுக்குப் புகட்டி, அவர்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்து, நேர்வழி காட்டியுள்ளனர். அவர்கள் பரிசுத்தமானவர்கள் என்று உறுதி கொள்ள வேண்டும். உலகிற்கு அனுப்பப்பட்ட நபிமார்கள் மொத்தம் ஓர் இலட்சத்து இருபத்து நான்காயிரம் என்றும்இ இவர்களில் வஹி மூலம் கட்டளைகளைப் பெற்றவர்கள் முந்நூற்றுப் பதின்மூன்று என்றும்இ இவர்களிலும் மேலே பிரஸ்தாபிக்கப்பட்ட எட்டு நபிமார்களும் மிகவும் முக்கியமானவர்கள் என்றும், அவர்கள் **"உலுல் அஜ்மு"** எனப்படுவர் என்றும் கூறப்படுகிறது. இந்த நபிமார்கள் அனைவர் மீதும் இறைவனருள் என்றென்றும் உண்டாவதாக! எனவே, எவனாவதொருவன் நபிமார்களை நபிமார்களல்ல என்றோ பொய்யர்கள் என்றோ பழித்தாலும், அவமரியாதையாகப் பேசினாலும், அவர்களை ஜின்னுகளென்று கூறினாலும், நம் பெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பிறகு வேறு நபிமார்கள் வந்துள்ளார்கள் அல்லது வருவார்கள் என்று கூறினாலும் அவன் காபிராவான்.

ஈமானிலுள்ள ஐந்தாம் ஆறாம் பகுதிகள்தாம் மறுமை நாள் உண்டென்றும், நன்மை தீமைகளுக்குக் கூலி அல்லது தண்டனை உண்டென்றும் விசுவாசிப்பதாகும். நிச்சயமாக இறைவன் ஒரு நாள் இறந்தோர் அனைவரையும் எழுப்பி அவரவர் செயல்களுக்குத் தக்க சன்மானத்தையோ, தண்டனையையோ கொடுப்பான் என்றும்இ அவன் மீது விசுவாசம் வைத்த மூமின்களைச் சுவர்க்கத்துக்கும், அவன்களை நிராகரித்த காபிர்களை நரகத்துக்கும் அனுப்புவான் என்று உறுதி கொள்ள வேண்டும். ஒரு மூமின் தான் செய்துவிட்ட தவறுகளுக்காகப் பாவமன்னிப்பு (தௌபா)த் தேடாமல் மரித்திருப்பினும் அல்லாஹ் நாடினால் அவனை மன்னிப்பான். அவன் நாடினால் அவனைத் தண்டிக்கவும் செய்வான் என்று ஈமான் கொள்ள வேண்டும்.

3. **தௌஹீத்**

தௌஹீதில் நான்கு படித்தரங்கள் உண்டு. அவற்றுள் முதலாவதானது, "தௌஹீதுல் உலூஹிய்யா" என்பது. அதாவது, இறைவன் என்ற பண்புக்கு உரியவன் ஒருவனே என்பது. இலாஹுல் பாதில் -விக்ரஹங்களையும், சூரியன், சந்திரன், நட்சத்திரம், நெருப்பு முதலியவற்றையும் தெய்வமென வழிப்படுவதும் மாதா, பிதா, குரு, அரசன் மற்றும் மரியாதைக்குரிய அனைவரையும் தெய்வமென்பதும் ஒதுக்கப்பட வேண்டும். இறைவன் ஒருவனேஇ தனித்தவனே, ஒப்பு உவமையற்றவனே என்று நான் ஏற்கனவே விவரித்த இறைமைத் தன்மையைக் கொண்ட அல்லாஹ்வை ஓர்மைப்படுத்தி இதயத்தில் இருத்த வேண்டும். இதன்படி "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்று கூறுகையில், இறைமைப் பண்புக்கு அருகதையுள்ளவன் அல்லாஹ் அன்றி வேறு யாருமில்லை (லா முஸ்தஹக்க லில் உலூஹிய்யத்தி இல்லல்லாஹ்) என்பதை உணர வேண்டும்.

தௌஹீதின் இரண்டாம் படித்தரம் "தௌஹீது அப்ஆல்" என்பது. அதாவது செயலில் ஓர்மை இருப்பதை உணர வேண்டும். இதன் விபரமாவது: உலகில் எத்தனையோ காரியங்கள் நடைபெறுகின்றன. நமது சடத்துவ கண்ணுக்க நேரடியாக ஒரு காரியத்தைச் செய்வது ஒருவர் அல்லது ஒரு வஸ்து என்று தான் தோன்றும். இதையே அரபியில் "பாஇல மஜாஸி" என்பர். ஆனால், எந்த ஒரு செயலையும் நடாத்துவிப்பவன் ஒருவன்தான் என்பதை நாம் உணரவேண்டுவது அவசியமாகும். உதாரணமாகஇ உணவு பசியைத் தீர்க்கும் என்கிறோம். வைத்தியன் நோயைக் குணப்படுத்துகிறான் என்கிறோம். கத்தி கையை அறுக்கிறது என்கிறோம். ஆனால் மேலாழ்ந்த பார்வைக்குக் காரியகர்த்தாக்களாகத் தோன்றும் இவற்றை ஆட்டி வைக்கும் செயலாளன் ஒருவன் இருக்கிறான் அல்லவா! இவனையே "பாஇல ஹகீகி" என்கிறோம். சர்வ சக்திகளினுடையவும் மூலஸ்தானமாக விளங்குபவன் அல்லாஹ்வே என்பதை உணர்வதுதான் இந்தத் தௌஹீதின் இரண்டாவது படித்தரமாகும். இதன்படி "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்ற கலிமாவைக் கூறுகையில் வணங்கத் தகுந்தவன், சகல சக்திகளுக்கும் மூலஸ்தானமானவனாயிருக்கும் இறைவனைத் தவிர வேறு யாருமில்லை என்பதை உணர வேண்டும்.

தௌஹீதின் மூன்றாம் படித்தரமாவது "தௌஹீதுஸ் ஸிபாத்து" ஆகும். அதாவது, இறைவனின் கல்யாண குணங்களிலுள்ள ஓர்மையை உணர்வதாகும். ஸிபாத்துகள் என்ற கல்யாண குணங்கள் இரு வகையினவாக அமைந்து உள்ளன. இவற்றில் சில குணங்கள் மானிடர்களிடமும் பிற பொருள்களிடமும் கூட ஓரளவுக்கு உண்டெனச் சொல்லப்படுகின்றன. ஆனால், அக்கல்யாண குணங்களுக்கு முற்முற்ற அருகதையுடையவன் அல்லாஹ் ஒருவனே அக்குணங்களை அவனுக்கே சூட்டி உறுதி கொள்வதே ஸிபாத்தில் ஓர்மை கொள்வதாகும். உதாரணமாகஇ ஹையுன் (ஜீவனுள்ளேளான்), ஆலிமுன் (அறிவோன்), பஸீருன்(பார்ப்போன்), ஸமீவுன்(கேட்போன்), முரீதுன்(நாடுவோன்) போன்ற குணப்பண்புகள் மானிடரிடம் ஓரளவுக்கு உள்ளன. மானிடரிடமுள்ள இவை நாளடைவில் அழிவுக்கும் குறைவுக்கும் இலக்காகின்றன. ஆனால் அல்லாஹ்விடம் உள்ள இக்குணங்களோ என்றும் அழியாதவை, குறையாதவை. ஆகவே, இந்த வகையில் "நிச்சயமாக அல்லாஹ் அன்றி ஜீவனுள்ளோன் யாருமில்லை" (லா ஹய்ய இல்லல்லாஹ்) என்றும் கலிமாவுக்குப் பொருள் உணர வேண்டும்.

தௌஹீதின் நான்காம்படித்தரமாவது: "தௌஹீது தாத்" அல்லது "தௌஹீதுல் வுஜூது" எனப்படும். அதாவது, இறைவனின் உள்ளமையிலுள்ள – தாத்திலுள்ள ஓர்மையை உணர்வதாகும். மௌஜூத் (உள்ளமை) என்பதும் இருவகைப்படும். சிருஷ்டிகளும் இருக்கின்றன. சிருஷ்டித்தவனும் இருக்கிறான். ஆனால் அழியாத, மாற்றமில்லாத உள்ளமை அல்லாஹ்வுக்கு மட்டுமே உரியதாகும். அல்லாஹ் அல்லாதவற்றுக்குக் கூறப்படும் உள்ளமைக் குணம் பேய்த்தேர் போல மறைந்து விடுவதாகும் என்பதை உணர வேண்டும். எனவே, கலிமாவின் பொருள் " உண்மையாக உள்ளமை நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் உடையதாயில்லை" (இன்ன பிதாலிக லதிக்ரா) என்று உணர வேண்டும்.

4. **மஃரிபா**

"ஜின்னுகளையும் மானிடரையும் என்னை வணங்குவதற்கேயன்றி (வேறு எதற்காகவும்)ப் படைக்கவில்லை என்று அல்லாஹ் குர்ஆன் ஷரீபில் மொழிந்துள்ளான். அவனை அறிந்து வணங்குவதுதான் உத்தமமான வணக்கமாகும். அவனை அவனுக்கு உரிய சகல சம்பூரணதன்மையோடும் அறிந்து கொள்வதற்குத்தான் "மஃரிபா" என்று பெயர். மஃரிபாவில் இரு விஷயங்களுண்டு. முதலாவது **"மஃரிபத்து தன்ஸீஹ்"** – அவன் தூய்மையுடையவன் என்று அறிந்து கொள்ளுதல். சிருஷ்டித்தவனை சிருஷ்டிக்கப்பட்டவைகளுடன் எவ்வித ஒப்பு, உவமையும் கற்பிக்காது தூய்மைப்படுத்தி கொள்ள வேண்டும். இறைவன் என்ற இயல்புக்கு இருக்க வேண்டிய கடமையானஇ ஆகுமானஇ முற்றுமே கூடாத சிபர்துக்களை உணர்வதோடு மார்க்கத்தின் வெளிப்படையான தொழுகை முதலிய அனுஷ்டானங்களிலும் விடாது ஈடுபட்டு வருபவருக்கே இந்த இர்பான் என்ற ஞானம் பிறக்கும். இங்குப் பிரஸ்தாபித்த கடமையானஇ ஆகுமானஇ ஆகாத ஸிபாத்துகள் இருபது உண்டு. அவற்றை நான்கு வகைப் பண்புகளாகப் பிரிக்கலாம்.

முதலாவதுஇ ஸிபாத்த – நப்ஸிய்யா: தனக்கே உரிய குணங்கள் - உஜூத் (உள்ளமை) போன்றவை.

இரண்டாவது, ஸிபாத்த –சல்லிய்யா: ஒவ்வாத குணங்கள் அந்தப் பரம்பொருளுக்குத் தகுதியற்றவற்றைத் தவிர்த்து, மூலாதரமான ஸிபாத்துக்கள், கிதம்(ஆதியந்தம் அற்றது), பகா(அழிவற்றது), முகாலபத்துல் லில் ஹவாதிஸி (படைப்புகளை விட்டும் மாற்றமானது), கியாமுன் பி நப்ஸிஹி(தன்னில் தானே நிலைபெற்றது), வஹ்தானியத் (ஒன்றித்திருப்பது) என ஐந்து ஆகும்.

மூன்றாவதுஇ ஸிபாத்த – மஆனி: பரம்பொருளில் தொக்கியுள்ள பண்புகள். இவை உயிர், அறிவுஇ நாட்டம், சக்தி, கேள்வி, பார்வை, பேச்சு என ஏழு ஆகும். இது கல்யாண குணங்கள் எனப்படும்.

நான்காவது, ஸிபாத்த – மஃனவிய்யா: மேலேயுள்ள மூன்று பண்புகளாலும் உருவகப்படுத்தப்பட்ட ஸிபாத்து. உதாரணமாக, உயிரிலிருந்து உயிருள்ளவன், அறிவிலிருந்து அறிவுள்ளவன் என்பன போன்ற பண்புகள்.

இந்த நால்வகைப் பண்புகளும் இறைமைத் தன்மையில் அத்தியாவசியமாய் இருப்பவை. இவற்றுக்கு மாறாக உள்ள பண்புகள் இறைமைத் தன்மைக்கு ஒவ்வாதவை என்பதை உணர வேண்டும். இறைமைத் தன்மைக்கு மாறான பண்புகளையே ஆகாத பண்புகள் என்று மேலே குறிப்பிட்டுள்ளோம்.

இறைவனுக்கு ஆகுமான பண்புகளாவன: ஈஜாத்(ஆக்குதல்), இஃதாம்(அழித்தல், தக்லீக்(படைத்தல்), தர்ஜீக் (உணவளித்தல்), மற்றும் உயிருண்டாக்குதல், மரிக்கச் செய்தல், வழிகாட்டுதல், வழி தவறுவித்தல் முதலியன. இக்குணங்கள் இறைவனிடமிருக்கலாம் இல்லாமலிருக்கலாம். இருக்கத்தான் வேண்டுமென்ற கட்டாயமில்லை.

இப்பண்புகளில் கீழ்க்கண்ட மூன்றும் அல்லாஹ்வின் நபிமார், ரஸூல்மார்களுக்கும் (வாஜிபானவையாய்) இருந்து வந்துள்ளன. 1. ஸித்கு – வாய்மை தவறாமை 2. அமானத்து – அடைக்கலம் காத்தல், வாக்கு மாறாமை,மோசம் செய்யாமை. 3. தப்லீக் - ஏவல், விலக்கல்களை ஜனங்களுக்கு விளக்குதல். இந்த மூன்று பண்புகளுக்கும் மாற்றமான மூன்று பண்புகள் உண்டு. அவை நபிமார்கள், ரஸூல்மார்களுக்கு (முஸ்தஹில்) ஒவ்வாதவை – அவை: 1. கித்பு – பொய் பேசுதல் 2. கியானத் - மோசஞ் செய்தல் 3. கித்மான் -ஒழித்தல் என்பனவாகும். நபிமார்கள்இ ரஸூல்மார்களுக்கு ஆகுமான பண்புகள் மனிதத் தன்மையை ஒட்டியவையான பண்புகளாகும். உதாரணமாக உண்பது, உறங்குவது, மணம் முடிப்பது, தொழில் செய்வது, வறுமையில் உழல்வது போன்றவை.

மஃரிபாவிலுள்ள மஃரிபத்துத் தன்ஸீஹ் என்பது பற்றி இதுவரை கவனித்தோம். சுருக்கமாக இஃது என்னவென்றால், அல்லாஹ்வுக்கு உருவமோ, திசையோ, குறியோ கிடையாது. "அவனைப் போல் ஒரு பொருளுமில்லை. அவனுக்கு ஒரு பொருளும் சமமில்லை" என்று விளங்கிக் கொள்வதுதான். இதையே "அந்த ரப்பின் உள்ளமைக்கு எல்லையோ, உருவமோ, குறியோ இல்லை" என்று ஷைகு முஹம்மது பழ்லுல்லாஹ் அவர்களும் கூறியுள்ளார்கள்.

இனி மஃரிபாவின் இரண்டாவது விஷயத்தைக் கவனிக்கலாம். இது தன்ஸீஹ் வ தஷ்பீஹ் எனப்படும். அதாவது தூய்மைப் பண்பையும் கற்பனைப் பண்பையும் சேர்த்து அறிதலாகும். ஸூபியாக்கள் இந்த இரு பண்புகளையும் சேர்ந்து அறியவேண்டுவதன் அவசியத்தையே வலியுறுத்தியுள்ளனர். தூய்மையான பண்பின் உருவகத்தில் அமையும் அறிவே சரியான மஃரிபாவாகும். தன்ஸீஹை (தூய்மைப் பண்பை) மட்டும் கணித்த ஞானம் குப்ரில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடும். இதுபற்றி முஹ்யித்தீன் இப்னு அரபி அவர்கள் தாங்கள் எழுதிய "புஸூஸுல் ஹிகமி"ல் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: "இறைவனை நீ தன்ஸீஹோடு மட்டும் கணித்துப் பேசினால்இ அவனைக் காணாதவனாக ஆகிவிகிறாய். அவ்வாறின்றித் தஷ்பீஹ் உடன் மட்டும் கணித்துப் பேசினால் அப்போது அப்பரம்பொருளுக்கு ஓர் எல்லை வகுத்துவிடுகிறாய். எனவே இரண்டையும் சேர்த்துக் கணித்தால் உண்டாகும் பொருளை அறிந்தால் நேர்வழி கண்டவனும்இ ஞானிகளின் தலைவனுமாவாய்."

இப்னு அரபி மேலும் கூறுகிறார்கள்: "ஷரீஅத்தின் ஏவல்களையும்இ விலக்கல்களையும் மெய்யென்று ஏற்றவன் இறைவனைத் தன்ஸீஹோடு மட்டும் கவனித்தால், தஷ்பீஹ் சம்பந்தமான திருக்குர்ஆனின் வசனங்களுக்கு மாறு செய்தவனாகி விடுவான். அதனால்

நெறிதவறி இறைவனுக்கும் அவன் திருத்தூதருக்கும் மாறு செய்தவனாகிறான். அறியாமையுடன் தன்னை ஒரு ஞானி என்றும் கூறிக் கொள்வான். அதாவது, திருக்குர்ஆனிலுள்ள தன்ஸீஹ் பற்றிய ஆயத்துக்களை ஏற்றுக் கொண்டு தஷ்பீஹ் பற்றிய ஆயத்துக்களை மறுத்தவனாகிறான்".

அந்தப் பரம்பொருளுக்குப் பரிசுத்த இறைவன் என்ற முறையில் எந்தெந்தப் பண்புகள் இல்லை என்று அறிந்தாயோ, அவற்றை அவன் தகுதிக்கு ஏற்ற வகையில் உருவகப்படுத்தினால் அவை உண்டாகலாம். "அவனுக்கு எல்லாப் பொருளுமுண்டு" என்று அல்லாஹ்வே அருளியுள்ளான். கியாம நாளில் படைப்புகளின் முன் அவை அறிந்திராத உருவில் இறைவன் வந்து நின்று கொண்டு, "நான் உங்கள் இறைவனல்லவா?" என்று வினவுவான் என்றும், அதற்குப் படைப்புகள், "நீ எங்கள் இறைவனல்ல, எங்களை எங்கள் இறைவன் காப்பாற்றுவான்" என்று கூறுவார்களென்றும், பிறகு இறைவன் அவர்கள் அறிந்துள்ள உருவில் காட்சி தருவான் என்றும், அப்போது படைப்புகள் அவனுக்குச் சிரஞ்சாய்த்து வணக்கம் புரிவார்கள் என்றும் ஹதீதில் விவரிக்கப்பட்டுள்ளது.

இதனால் அறிய முடிவது என்னவென்றால், இறைவன் உருவற்ற தூய்மைப் பண்புடன் உள்ளவனாயினும் ஏதோ ஒரு வகையாக அவனுக்குத் தோற்றமும் உண்டு என்பதே. முஹம்மது இப்னு பழ்லுல்லாஹ் எனும் பெரியார் கூறுவதாவது: "இப்படியொரு சூட்சும வடிவில் இறைவன் காட்சி தந்தாலும் நாம் உருவகப்படுத்திக் கொள்ளும் அவன் உள்ளமைக்கு உருவும் வரம்பும் இல்லை என்ற பண்பில்தான் நம்பிக்கை கொள்ள வேண்டும். உண்மையில், தன்ஸீஹ் அவனுடைய உள்ளமையோடு அன்வயித்துத் தஷ்பீஹ் சூட்சுமமானது; நாமே ஓர் அலாதியான படிவத்தில் உருவகப்படுத்தி வைத்த ரூபமற்ற உருவம். இந்தத் தன்ஸீஹ் தஷ்பீஹ் சம்பந்தமாக ஸுப்ஹான ரப்பிக ரப்பில் இஜ்ஜத்தி அம்மா யஸிபூன் (37:180) என்ற திருக்குர்ஆன் ஆயத்தின் கருத்தை ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். அத்துடன், "இறைவன் அன்றும், இன்றும் என்றும் ஒன்றுபோல் அனாதியாகவே இருக்கிறான்" என்ற ஹதீதின் கருத்தையும் ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

தன்ஸீஹ், தஷ்பீஹோடு கூடிய படிவத்தில் உதிக்கும் ஞானம் மிகவும் ஆழமானதாயிருக்கும். அந்தச் சாகையில் அனுபவப்பட்டு தெளிந்தவர்களே அதை அறிய இயலும். எனவேதான் மெய்ஞ்ஞான சொரூபிகளான ஞானிகள் இந்த உஜூது பற்றிய நுணுக்கங்களைச் சாதாரண ஜனங்களிடம் அதிகமாகப் பிரஸ்தாபிப்பதில்லை. "உஜூதின் (உள்ளமையின்)நுட்பங் குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்" என்று இப்னு அரபி அவர்களும் எச்சரித்துள்ளார்கள். ஏனெனில், உஜூத், தன்ஸீஹைக் குறித்து விளக்குகையில்; இறைவனின் வேறு சில சக்திகளை மறுப்பது போல் தோன்றும். அதுபோலவே, தஷ்பீஹை விளக்குகையிலும் தகராறு உண்டாகும். இது மிகவும் எச்சரிக்கையுடனிருக்க வேண்டிய கட்டமாகும்.

உஜூதின் படிவங்களை அப்துல் கரீம் ஜீலி தங்களுடைய "இன்ஸானே காமில்" என்ற அரிய நூலில் நாற்பது வகைகளாகப் பிரித்துள்ளார்கள். அந்த நாற்பது வகைகளையும் பெரியார் முஹம்மது இப்னு பழ்லுல்லாஹ் ஏழு படிவங்களாகச் சுருக்கித் தந்துள்ளார்கள். அந்த ஏழும் வருமாறு:-

1. லா- தய்யுன் (குறிக்கப்படாதது): எந்தப் பண்போ, பெயரோ, உருவோ கொண்டு குறிக்கப்படாதது. அதுவே அஹதிய்யா, இத்லாக், தாத்துல் பகுத், குன்ஹுல் ஹக் அல்லது உள்ளமையின் தோற்றம் என்று கூறப்படுகிறது. இந்தப் படிவத்தில் புகுந்து தெரியவேண்டுமானால் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். "அவனை (அவனின் உள்ளமையை) எந்த நுண்ணறிவும் எட்டாது" (திருக்குர்ஆன்). "இறைவனின் உண்மையான உள்ளமையை அறிவதில் மனிதர்கள் ஞானமற்றவர்களே" (ஹதீது)

2. தஅய்யுன – அவ்வல்: அல்லாஹ் தன் உள்ளமையுடனும், பண்புகளுடனும் இருந்து கொண்டு படைப்புகளை அத்துடன் இணைந்திருப்பதை நாம் அறிந்து கொள்ளுதல், இது வஹ்தத்துப் படிவம், ஹகீகத்தே முஹம்மதிய்யா, ஸிபாத்துல்லாஹ் படிவம், தாத்திய்யாப் படிவம் என்றும் கூறப்படும்.

3. தய்யுன – தானி : இறைவன் தன் உள்ளமையுடனும், பண்புகளுடனும் இருந்து கொண்டு படைப்புகளைத் தனித்தனியே அறிந்ததை நாம் அறிந்து கொள்ளுதல். இது வாஹிதிய்யா, மனிதத்துவத்தின் ரகசியம் என்றும் கூறப்படுகிறது. இங்குதான் அல்லாஹ்வின் திருநாமங்கள் அவன் சிருஷ்டிகளுக்கும் குறிக்கப்படுகின்றது.

4. ஆலமுல் - அர்வாஹ் (ரூஹுகளின் உலகம்): இதை ஆலமுல் ஜபரூத் என்றும் கூறுவதுண்டு.

5. ஆலமுல் மிதால் (உவமை உலகம்): இதை ஆலமுல் மலக்கூத் என்றும் கூறப்படும்.

6. ஆலமுல் அஜ்ஸாம் (ஜட உலகம்): பொருள்களை சடத்துவக் கண்களால் கண்டறியும் உலகம். இஃது ஆலம் நாஸ-த், ஆலமுல் முல்க், ஆலம் ஷஹாதத் என்றும் கூறப்படுகிறது.

7. மர்தபத்தே இன்ஸானுல் காமில் (சம்பூர்ண மனிதத்துவப் படிவம்) மேலேயுள்ள முதல் படிவம் நீங்கலாக மற்றுமுண்டான ஐந்து படிவங்களும் கூடி உண்டாகும் நிலையாகும்.

இந்த ஏழு படிவங்களில் மூன்று இறைவனுக்கு ஆதி அந்தமற்ற பண்புடன் பிணைந்துள்ளன. இதையே "பெயரும், பெயருக்குரியவனும், பண்பும், பண்பால் வருணனை பெற்றவனும் ஒன்றே" என்று ஒரு பெரியார் விளக்கியுள்ளார். மற்ற நான்கு படிவங்களும், சிருஷ்டிகளுடனும் சம்பந்தமுள்ளவை. இவை ஒன்றுமில்லாதிலிருந்து உண்டானவை (முஹ்திஸ்) ஆகவும், அழியக்கூடியவையாகவும் இருக்கின்றன. முந்திய மூன்று படிவங்களுக்கும், பிந்திய நான்கு படிவங்களுக்கும் உள்ள சம்பந்தத்தை ஞானியர்கள் ஒரு பொருளுக்கும் அதன் நிழலுக்கும் ஒப்பிட்டுள்ளனர். அதாவது, சுட்டிக் காட்டப்படும்போது, இதோ பொருள், அதோ நிழல் என்று இருவேறு பொருள்களாக வெளவேறாகக் கணிக்கப்படுகின்றன. ஆனால், பொருளின் சாயலே நிழல் என்னும்போது பொருளின்றி நிழல் இல்லை என்றாகிவிடுகிறது. இப்படி நிர்ணயிப்பதே ஸூபித் தத்துவம். இதன்படி நடப்பவனே ஸூபி. அவன் ஏற்கனவே ஸூபியாயின் அவன் இல்முல் யகீன் எனும் ஆராய்ந்து உறுதி கொண்ட அறிவின் துறையை எய்தி விடுவான்.

ஐனுல் யகீன் (கண்ணால் கண்டு உறுதி கொள்ளல்) ஹக்குல் யகீன் (தெரிந்து உறுதி கொள்ளல்) ஆகியவற்றின் அனுபவங்களை அடைய ஷரீஅத்திலும் ஹகீகத்திலும் தேர்ந்த அனுபவ ஞானம் படைத்த ஷைகு ஒருவரிடம் சென்று ஞானோபதேசம் பெறுவதுதான்

சரியான மார்க்கமாகும். “ஒரு மரம் தானாகவே முளைத்தால் அதில் பெரும்பாலும் காய்ப்பதில்லை. அப்படிக் காய்த்துப் பழுத்தாலும்இ பயன்படுத்தப்பட்டுஇ உரமிடப்பட்டு வளர்க்கப்பட்ட ஒரு மரத்தின் பழத்தைப்போன்று ருசி இருக்காது“ என்று ஷைகு அலிய்யுத் தகாயிக் கூறியுள்ளார்கள். இதுபோன்றுதான் ஒருவன் ஆத்ம ஞானக் கல்வியில் ஓரளவுக்குத் தெளிவு பெற்றாலும்இ ஒரு ஷைகின் வழிகாட்டுதலின்றி அவன் பூரண வெற்றி காணமுடியாது.

5. **நல்ல அமல்கள்**

“தன் இறைவனின் சந்திப்பில் நாட்டங் கொண்டவன் நல் அமல்களைச் செய்யட்டும். மேலும் தன் ரப்பின் வணக்கத்தில் யாரையும் இணை வைக்காமலிருக்கட்டும் என்று திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ளதை உணர்ந்து அதை செய்ய வேண்டும். எந்த நல் வணக்கம் இறைவன் திருவுள்ளத்துக்கு ஏற்றதாயிருக்குமோ அதுவே சிறந்த நல் அமல் ஆகும். அவ்வித நல்வணக்கம் புரிவதற்கு இரண்டு நிபந்தனைகள் உண்டு.

இரண்டாவதாகஇ ஸூபியாக்களாகிய ஆத்மஞானத்தின் அடிப்படை நிபந்தனை, அஃதாவது, எந்த இபாதத்தையும் இம்மை, மறுமையின் கூலியை எதிர்பார்த்துச் செய்யக் கூடாது. இவ்வுலகின் வசதிகளையோ, சுவர்க்கத்தின் சுகபோகங்களையோ, நரகத்தின் வேதனையையோ மனத்தில் கொண்டு வணக்கம் புரியக் கூடாது. “அல்லாஹ் எஜமானன். நான் அடிமை. கூலி கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் பணி செய்வது என் கடமை“ என்ற பரிபக்குவமான நிலையிலிருந்து கொண்டு வணக்கம் புரிய வேண்டும். “சுவர்க்கத்தின் சுகபோகத்தை விரும்பியோ நரகத்தின் வேதனையை அஞ்சியோ வணங்குபவன் மகாபெரும் பாவியாவான். நரகத்தையும்இ சுவர்க்கத்தையும் நான் சிருஷ்டித்திராவிட்டால் நான் வணங்கப்படுவதற்கு அருகதையற்றவனா?“ என்று இறைவன் கேட்பதாக ஹதீது ஷரீபில் வந்துள்ளது.

இந்த இரு நிபந்தனைகளுக்குட்பட்டு வணங்குபவன் வேறு இரு வகை முக்கியமான அனுஷ்டானங்களைக் கண்டிப்பாகக் கடைப்பித்தேயாக வேண்டும். அவற்றில் ஒருவகை பர்ளானவை. மற்ற வகை சுன்னத்தானவை.

முதன்முதலாகஇ அல்லாஹ் அடியான் மீது கடமையாக்கிய - பர்ளாக்கிய அனுஷ்டானங்கள் தொழுகைஇ ஜகாத், நோன்பு, ஹஜ்ஜு ஆகியவைதாம். இவற்றை நிறைவேற்றுவதில் தயக்கமோஇ தாமதமோ, தவறோ இருக்கக் கூடாது. “வேறு வணக்கங்கள் பல புரிபவனைவிடஇ நான் பர்ளாக்கிய கடமைகளைச் சரிவரச் செய்பவனே என்னிடம் மிகவும் நெருக்கமானவன்“ என்று இறைவன் கூறுவதாக நம் பெருமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளியுள்ளார்கள். எனவே, பல சுன்னத்தான கருமங்களை அனுஷ்டிப்பதை விட ஒரு அமலைச் செய்வது அல்லாஹ்வின் சமீபத்துவத்தை நெருங்குவதற்கு மிக மிக ஏற்ற வழியாகும். ஏனெனில், பர்ளான இபாதத்துகளில் ஆத்மீக ரகசியங்கள் பல பொதிந்து கிடக்கின்றன. அத்தகைய ஆத்ம நலன்கள் வேறு இபாதத்துகளில் இல்லை. “வல திக்றுல்லாஹி அக்பரு பீஹா“(அல்லாஹ்வைத் தியானிப்பதாகிறது மகா பெரியது – அதில்) என்ற திருவசனத்துக்கு இப்னு அரபி, “பீஹா“ (அதில்) என்று பொருள் தராமல், “தொழுகையில்“ என்று வியாக்கியானம் செய்கிறார்கள்.

தொழுகையை அனுஷ்டிப்பதில் புதைந்து கிடக்கும் ஆத்ம ரகசியம் மகத்தானது. சகல வகைகளிலும் தூய்மையும் ஒருமையுமான அல்லாஹு சுப்ஹானஹுவத்தஆலாவின் பண்பு தன்னகத்தேயும் ஒளிவிட்டு மிளிரத்தான் ஒரு சடப்பொருளாகச் சமைந்துவிட வேண்டும் என்று அடியான் நாடுவதே அந்தத் தொழுகை அனுஷ்டானத்தின் அந்தார்த்தமாகும். அந்தப் பரம ரகசியம் சரிவரக் கைகூட வேண்டுமாயின், தொழுகைக்கு முன்னராகப் போடப்பட வேண்டிய அடிப்படைகளையெல்லாம் ஒழுங்காக அமைத்துக் கொள்ள வேண்டும். மேலும், "அல்லாஹ்வின் பண்புகளை நீங்களும் உங்களுள் உண்டாக்கிக் கொள்ளுங்கள்" (தகல்லகூ-பி- அக்லாக்கில்லாஹ்) என்றே நம் பெருமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் அருளியுள்ளார்கள். இதன் தாத்பரியம், உங்களகத்தே களங்கப்பட்டுக் கிடக்கும் பண்புகளைத் தூய்மைப் படுத்த வேண்டும் என்பதுதான்.

தொழுகைக்கு அடுத்தபடியான கடமையான ஜகாத்தின் அகமியம், சிருஷ்டிகளில் காணப்படும் இயல்புகளை உதறிவிட்டு, அல்லாஹ்வின் பண்பைப் பெறத் தன்னையும் தன் செல்வத்தையும் அர்ப்பணிப்பதன் மூலம் தன்னைப் பரிசுத்தமானவனாக்கிக் கொள்வதுதான்.

இதேபோன்று நோன்பிலும் மகத்தான அகமியம் அடங்கிக் கிடக்கிறது. மனிதன் தன்னகத்தேயுள்ள ஆசாபாசங்களை முற்றும் துறந்துவிட்டு, அவை தேவையற்றவை என மனத்தாலும் ஒதுக்கி விடுவதால்இ அல்லாஹ்விடம் காணப்படும் "ஸிபாத்துஸ் ஸமதிய்யா"வைத் (தேவையற்றவன் என்ற பண்பை) தானும் பூரணமாகப் பெற்றுக் கொள்ளத் தன்னைப் பக்குவப்படுத்திக் கொண்டவனாகிறான். இது சித்தி பெற நோன்பு உதவுகிறது.

இதுபோன்றே ஹஜ்ஜிலும் மாபெரும் அகமியம் அடங்கியுள்ளது. ஹஜ்ஜு செய்வதற்காக மக்கா செல்வதன் தாத்பரியம், மக்காவை மட்டுமின்றி அல்லாஹ்வைத் தேடி தன் ஜீவ யாத்திரையையே தொடங்குவதாய் இருக்கிறது.

எனவேஇ ஷரீஅத்தின் வெளிரங்கமான ஒவ்வொரு அனுஷ்டானத்திலும் மேற்கூறியது போன்ற மகத்தான அகமியங்கள் அடங்கி கிடக்கின்றன. இதே போன்று ஒவ்வோர் அனுஷ்டானத்திற்கும் அடிப்படையும், நிபந்தனைகளும், கட்டாயச் சாங்கியங்களும் பல இருக்கின்றன. அவை யாவற்றையும் கூற இச்சிறு நூலில் இடமில்லை.

பர்ளான இபாதத்துகளில் தலையாய இரகசியங்கள் அமைந்து கிடப்பதால், இவையே ஏனைய சகல அமல்களையும் விடச் சிறந்தவையாகும். எனவேதான் இவற்றைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்து அனுஷ்டிக்குமாறு அல்லாஹ் பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்தி ஏவியுள்ளான். இவ்விஷயம் பற்றி அப்துல் கரீம் ஜீலி அவர்கள் தங்களுடைய **"இன்சானுல் காமில்"** என்ற அருமையான நூலில் கீழ்க்கண்ட விதம் எழுதியுள்ளார்கள்:

"மெய்ஞ்ஞானமும், தெளிவான விளக்கமும் பெறாத சாதாரண ஜனங்கள், அல்லாஹ்வின் இந்த ஷரீஅத்தின் வெளிப்படையான அஞுஷ்டானங்கள் குறித்து அலட்சியமாகப் பேசுகின்றனர். ஆனால் ஷரீஅத்தின் இந்த வெளிரங்க அனுஷ்டானங்கள் ஒரு பெரிய உண்மையை விளக்கும் ஒளி போன்றவையாகும். "ஷரீஅத் ஒரு வித்தின் மேலே உள்ள உமி போன்றது. மேல் தொலி போன்றது" என்று ஓர் அறியாத மனிதன் கூறலாம். ஷரீஅத் என்பதுஇ அந்த வித்தின் உமி அல்லது தொலியும் அதனுள் உள்ள பருப்பும் சேர்ந்ததுதான்

என்பதை அவன் அறியவில்லை. தூய்மையே சின்னமாக அமைந்த நம்பெருமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இந்த ஷரீஅத் அனுஷ்டானத்தைப் போதித்துள்ளார்கள். அவர்கள் தங்களுடைய எந்த ஞானத்தையும்இ எந்த நீதியையும் எந்த உபதேசத்தையும் தங்களுடைய உம்மத்துகளிடம் கூறாமல் மறைத்து வைக்கவே இல்லை. எந்த விலக்கல்களையும் தெரிவிக்காமல் விட்டுவிடவுமில்லை. இந்நிலையில் ஷரீஅத்தானது வித்தின் வெறும் மேல்தோல் அல்லது உமிதான் என்று கூறுவதெங்ஙனம்?"

இமாம்களின் நிபந்தனையையும் ஸூபியார்களின் நிபந்தனையையும் ஏற்பதுடன் முதலாவதாக பர்ளான அனுஷ்டானங்களைக் கடைபிடிக்க வேண்டுவதன் அவசியத்தை மேலே பார்த்தோம். இனி இரண்டாவதான ஸுன்னத்தான அனுஷ்டானங்கள் பற்றிக் கவனிக்கலாம். "ஸுன்னத்தான இபாதத்துகளை மிக மிக அதிகமாக அனுஷ்டிப்பதன் மூலம் என் அடியான் என்னை அதிகம் நெருநங்கிக் கொண்டே இருக்கிறான். அதுபோன்று நான் அவனை நேசித்து விட்டால் அவனுக்குக் கண்ணாகவும்இ காதாகவும்இ நாவாகவும், கையாகவும்இ காலாகவும் ஆகிவிடுகிறேன்" என்று அல்லாஹ் சுப்ஹானஹுவத்தஆலா தெரிவித்துள்ளதாக ஹதீதில் வந்துள்ளது.

ஸுன்னத்தான இபாதத்துகள் மூன்று வகைப்படும். 1. அப்ஆலியா –வெளிப்படையான அனுஷ்டானங்கள் 2. அக்வாலிய்யா – சொல்லுடன் கூடிய அனுஷ்டானங்கள் 3. அப்காரிய்யா – தியானத்துடன் கூடிய அமல்கள் எனப்படும்.

1. அப்ஆலிய்யா - இந்த வெளிப்படையான அனுஷ்டானங்களும் பற்பலவாம். சிறிய சிறிய அருவருப்பான (மக்ரூஹான) செயல்களைச் செய்யாது ஒதுங்கல், போதுமென்ற மனத் திருப்தி, எதற்கும் அல்லாஹ்விடம் நம்பிக்கை வைத்தல் போன்ற அனுஷ்டானங்களும் இதில் அடங்கும். ஸுன்னத்தான நோன்புகளை அதிகமாக நோற்றலும், குறிப்பாக வியாழன்இ திங்கள், அய்யாமுல் பீழ் (பிரதி மாதமும் 13, 14, 15) தினங்களில் நோன்பு பிடிப்பதும், ஷவ்வால் ஆறு நோன்பையும்இ துல்ஹஜ்ஜு மாதம் ஒன்பது நோன்பையும், முஹர்ரம் மாதம் ஆஷூரா நோன்பையும், ரஜப், ஷபான் மாதங்களின் நோன்பையும் நோற்பதும் இதில் சேர்ந்ததாகும். ஸுன்னத்துத் தொழுகைகள அதிகமாகத் தொழுவதும், பர்ளுடன் கூடிய ஸுன்னத்துத் தொழுகைகளைத் தொழுவதும், வித்று, தஹஜ்ஜத், இஷ்ராக், லுஹா, அவ்வாபீன், இஸ்திகாரா ஆகிய தொழுகைகளைத் தொழுவதும், கல்வத்தில் அல்லாஹ்வை பற்றிய சிந்தனையில் ஏகாந்தத்தில் சிறிது நேரமேனும் இருப்பதும், வெகுவாகப் பசித்திருத்தலும், இரவு விழிப்பதுடன் மௌனமாகச் சிந்தித்தலும் -இவை போன்ற மற்ற அமல்களும் அப்ஆலிய்யாவில் சேர்ந்தவையாகும்.

2. அக்வாலிய்யா : சொல்லுடன் கூடிய சுன்னத்களில் தௌபா செய்தல், இஸ்தி..பார் செய்தல், திருக்குர்ஆனை அதிகமாக பாராயணம் செய்தல், ஸலவாத்து, ஔராது, பற்பற திக்றுகள் முதலியவற்றை ஜபித்தல் ஆகியவை அடங்கும். அல்லாஹ் நம் பெருமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இட்டுள்ள உத்தரவைப் பாருங்கள்: "நபியேஇ உமது உள்ளத்துள் அச்சத்தோடும்இ பணிவோடும், அந்தியும், சந்தியும் நும் இறைவனைச் சப்தமின்றிச் சிந்தனை (திக்று) செய்யும் இறைவனை மறந்தவர்கள் கூட்டத்திலாக வேண்டாம்!"

இதற்கொப்பச் செய்யப்படக்கூடிய திக்றுகள் பல வகையுண்டு. அவற்றில் மூன்றை இங்கே தரலாம்.

**அ) திக்ருல் அன்பாஸ்:** (திக்ரின் கலிமாக்களை மூச்சுடன் இழையவிடல்) லாஇலஹா இல்லல்லாஹு என்ற கலிமாவில் நஃபீயும், இஸ்பாத்தும் (இல்லை,உண்டு என்ற இரண்டும்) உள்ளன. அதாவது லாஇலாஹ என்பதில் இறைவன் இல்லை என்று “இல்லை“ வருகிறது. இல்லல்லாஹு என்பதில் அல்லாஹ்வைத் தவிர என்று “உண்டு“ வருகிறது. முந்தியது நஃபீ, பிந்தியது இஸ்பாத். இந்தத் திக்றை உச்சாடனம் செய்கையில் லாஇலாஹ எனும்போதுஇ மூச்சை வெளியில் தள்ளவும், இல்லல்லாஹு எனும்போது மூச்சை உள்ளே இழுக்கவுமாக இருக்க வேண்டும். இதில் சரியான பயிற்சி ஏற்பட்டபின் “அல்லாஹு அல்லாஹ்“ என்ற திக்றைத் தொடங்க வேண்டும். அப்போது உள்ளிழுக்கும் மூச்சுடனும், வெளியில் தள்ளும் மூச்சுடனும் அன்வயித்துக் கலந்து “அல்லாஹ் அல்லாஹ்“ என்ற திக்றையும் இதே முறையில் உச்சாடனம் செய்து வர வேண்டும்.

**ஆ) ஷுஹுதுல் - கஸ்ரத்தி –பில்- வஹ்தத்தி**: பல்வேறு தோற்றங்களும், சிருஷ்டிகளும் ஒரே உள்ளமையில் கலந்து விடுவதை உருவகப்படுத்திக் கொண்டு அல்லாஹு அல்லாஹு ஹு“ என்று முன்கூறிய முறையில் லயித்து ஜபிக்க வேண்டும்.

இந்த திக்றுகளை உச்சாடனஞ் செய்து வருவதற்கு ஒரு முக்கியமான அடிப்படை நிபந்தனை மிகவும் அவசியமானதாகும். மனத்தை அலைமோத விடாது ஒரே தலத்தில் நிறுத்தி (இஸ்திஹ்லார்) உலக ஆசாபாசங்களை மறந்து உச்சாடனம் செய்ய வேண்டும். ஏனெனில், கல்பு ஆவி போலும்இ திக்று உடல் போலும் இருக்கின்றன. இத்தகைய இஸ்திஹ்லார் இல்லாத திக்று உளிரற்ற உடல் போன்றுதான். ஒவ்வொரு திக்றுக்கும் ஒவ்வொரு இஸ்திஹ்லார் உண்டு. அதனைப் பக்குவப்பட்ட ஒரு ஷைகிடமிருந்து தெரிந்து கொள்வதுதான் நலமாகும்.

3. **அப்காரிய்யா:** ஸுன்னத்தான இபாதத்துகளில் முதல் இரண்டு வகைகளையும் மேலே விவரித்தோம். மூன்றாவது வகையான அப்காரிய்யாவை இங்கே விளக்குவோம். பர்ளானதைச் செய்யும்போது அதை அல்லாஹ் பர்ளாக்கினான் என்றும், ஸுன்னத்தை அனுஷ்டிக்கும்போது அதை அல்லாஹ் சுன்னத்தாக்கினான் என்றும்இ ஹராமானதை விட்டொதுங்குகையில் அல்லாஹ் அதை ஹராமாக்கினான் என்றும் முழுமனத்துடன் செய்ய வேண்டும். ஏதேனும் புதிய ஞானம் உதயமாகும்போது அதை அளித்தவன் அல்லாஹ்வே. அவன்தான் சர்வமும் அறிந்தவன் என்று உணர வேண்டும். இதற்கு அரபியில் “ஷுஃல ஷத்தாரி“ என்று பெயர். இதுபோன்றே யாதொன்றையும் காணும் போதும், கேட்கும்போதும் (மனம் ஒன்றித்துத் திக்று செய்யும்போது) அவன் புறம் சாட்டி விடவேண்டும். இதுவுமின்றி நீ வந்த வரலாற்றையும் போகப் போகும் வரலாற்றையும் வெளியிடும் திக்றும் உண்டு. அதன் பெயர் “ஷுஹுதுல் - மப்தஆ-வல்-மஆத்“ என்பது இந்தத் திக்றின் இரகசியத்தை ஸூபியாக்களான பெரியார்கள் “ஸீன்-ரெ-நூன்-நூன-ஹெ-மீம்-தெ“ என்ற (அரபு) அட்சரங்களைக் கொண்ட திக்றுக்குள் அடக்கியுள்ளனர். (இதில் “ஹெ“ என்பது அரபு எழுத்து வரிசையில் நூனுக்கு அடுத்து வரும் எழுத்து. “தெ“ என்பது அலிபு, பேக்கு அடுத்த எழுத்து) இதைச் சரியான பயிற்சியும் அனுபவமும் உடைய ஷைகிடம் கேட்டே விளங்கிக் கொள்ள வேண்டும்.

**அன்றாட இபாதத் அனுஷ்டானங்கள்**

இதுவரை முக்கியமான சில நல்ல அமல்களை விவரித்தோம். இனி முராகபா, முஷாஹதா, மற்றும் தஹஜ்ஜத் தொட்டு ஒருவன் அன்றாடம் செய்ய வேண்டிய ஸுன்னத்தான காரியங்கள் பற்றியும் சுருக்கமாக விளக்கி இதை முடிப்போம்.

முராகபா (தன்னுள் நோட்டமிடுதல்): இதிலும் பல வகைகள் உண்டு. ஆனால், அவற்றில் மூன்றை மட்டும் இங்கே குறிப்பிடலாம்.

1. **ஸிபாத் - பாஇலிய்யா:**

சகல சசந்தர்ப்பங்களிலுமே உன்னகத்தேயுள்ள இப்பண்பை உன்னில் இல்லாத வண்ணம் ஒதுக்கி விட்டு, அல்லாஹு ஸுப்ஹானஹுவத்தஆலாவின் செயலாற்றும் பண்பே உன்னில் திகழ்கிறது என்று உணர்வது.

2. **ஸிபாத்து – தாத்திய்யா:**

உனக்குரிய உள்ளமைப் பண்பை ஒறுத்துஇ அல்லாஹ்வின் உள்ளமைப் பண்பையே சிந்தையில் நிறுத்துவது.

3. **ஸிபாத்தே – பாயிலிய்யா:**

உன்னுடைய "நான்" என்பதை நிர்மூலமாக்கி அல்லாஹ்வின் "நான்" என்ற பண்பை உணர்ந்து கொள்ளல். இந்த முராகபாவை நெடுகிலும் செய்து வருவது மிக மிக நலமாகும்.

முஷாகதா(ஸத் முயற்சி – ஆழ நோக்கல்): இதிலும் பல வகையுண்டு. இதில் ஸூபியாக்களான நாதாக்களில் பெரும்பாலோர் அனுஷ்டித்து வரும் சில முறையினை மட்டும் இங்கே தரலாம்.

அல்லாஹ்வுக்குப் பல பண்புகளுடனும் கூடிய பல நாமங்கள்(இஸ்முகள்) உண்டு. அவற்றில் ஏதாவது ஒன்றை, ஷம்ஸின் (சூரியனின்) மையில் தோய்த்து, பிக்று (சிந்தனை)வின் பேனாவால் புஆத்(உள்ளம்) என்ற பலகையில் எழுதி, அ∴து அல்லாஹ்வின் எத்தனையோ காட்சிகளில் ஒன்றாயின் கற்பனைக் காட்சியில் அவன் சூட்சுமமாய் பிரதிபலிக்கிறான் என்று ஆழ நோக்குவது ஒருமுறையாகும். இது "முஷாஹதா-இஸ்முத்தாத்" எனப்படும்.

"அ∴யானே தாபிதா"வையும், "அ∴யானே காரிஜா"வையும் நன்றாகத் தெரிந்து கொண்டு பிறகு நிஷ்டையிலமர்ந்து, இரண்டையும் ஒன்றாக்கி அப்படி ஒன்றாக்கப்பட்ட ஒரு காட்சியில் ஹக்குத்தஆலா சூட்சுமமாக வெளியாகிறான் என்று அறிவது மற்றொரு முறையாகும். இது **"முஷாஹதாக –ஐனுல்- இன்ஸான்"** எனப்படும்.

பெரிய ஆலத்தையும்(ஆலம் கபீராவையும்), சிறிய ஆலத்தையும் (ஆலம் சகீராவையும்) தனித்தனியே நன்கு கற்றுத் தேர்ந்த பின் ஆலம் கபீராவே அப்பழுக்கற்றது, பூரணமானது என்றறிந்து கொள்வது இன்னொரு வகையாகும். இது **"முஷாஹதா இன்ஸானுல் காமில்"** எனப்படும். இதையே அல்லாஹ், "எம்மைச் சரியாக உணர்ந்து அறிந்து கொள்வதில்

நேர்ப்பட முயன்று முன்னேறியவர்களுக்கு நாம் நேர்வழி காட்டுவோம்“ என்று கூறியுள்ளான்.

எனவே சக்தியைக் கொண்டு முக்தி பெற- ஈடேற்றமடைய விழைபவர்கள் மேலே விவரிக்கப்பட்ட யோக முறைகளில் விபரமறிந்து, வழியறிந்து ஈடுபட்டுத் தேர்ச்சி அடைவது அவசியமாகும்.

சாதகனே! பர்ளான அனுஷ்டானங்களை முற்றும் நிறைவேற்றிய பிறகு, உன்னால் இயன்றவரை ஸுன்னத்தான அனுஷ்டானங்களையும் கடைப்பிடித்து வா. முக்கியமாக, இரவில் மூன்றில் ஒரு பாகம் கழிந்தபின் எழுந்து தஹஜ்ஜத் தொழுகை, குறைந்தபட்சம் நான்கு அல்லது பன்னிரண்டு ரக்அத்துகள் தொழ ஒவ்வொரு ரக்அத்திலும் அல் பாத்திஹா ஸூரா, யாஸீன் ஸூரா இரண்டையும் ஓத வேண்டும். ஒவ்வொரு ரக்அத்திலும் மீண்டும் மீண்டும் யாஸீன் ஓதச் சக்தியில்லாவிட்டால், யாஸீனைப் பன்னிரண்டு அல்லது எட்டு அல்லது நான்கு பிரிவுகளாக பிரித்துக் கொண்டு முழு தஹஜ்ஜத் தொழுகையிலும் யாஸீனை ஒரு தடவை ஓதுவதுடன் நிறுத்திக் கொள்ளலாம். இதற்கும் இயலாதிருப்பின் ஸூரத்துல் இஃலாஸை ஒவ்வொரு ரக்அத்திலும் மூன்று முறை ஓதித் தொழலாம். இவ்வாறு தஹஜ்ஜத் தொழுகையை முடித்த பின், உனக்குப் பழக்கமான ஏதேனும் திக்றை ஏற்கனவே விபரித்துள்ள முறையில் முஷாஹதா, முராகபா செய்ய வேண்டும். பஜ்ர் வரும்வரை இவ்விதம் செய்து கொண்டிருந்து விட்டு, பர்ளு தொழுகைக்காகப் பள்ளிவாயிலுக்குச் செல்ல வேண்டும். அவ்வாறு செல்லும் வழியில் இஸ்திக்பார் ஓதிக் கொண்டே போக வேண்டும். இமாம் ஜமாஅத்துடன் சேர்ந்து நின்று பஜ்ருத் தொழுகையைத் தொழுது கொள்ள வேண்டும். பிறகும் ஒரு தடவை யாஸீன் முழுவதையும் ஓதி சூரிய உதயம் வரை ஏகாந்தத்தில் (கல்வத்தில்)இருந்து உனக்குப் பழக்கமான திக்றை முஷாஹதா, முராகாபாவில் அப்பியாசித்து வர வேண்டும்.

இஷ்ராக் நேரம் வந்ததும் இஷ்ராக் இரண்டு ரக்அத்தும், இஸ்திகாரா இரண்டு ரக்அத்தும் தொழ வேண்டும். பின்பு கீழ்க்கண்ட துஆவை ஓத வேண்டும்.

اَللهُمَّ اِنِّيْ اَسْتَخِيْرُكَ بِعِلْمِكَ وَاَسْتَقْدِرُكَ بِقُدْرَتِكَ وَاَسْئَلُكَ مِنْ فَضْلِكَ الْعَظِيْمِ، وَاِنَّكَ تَقْدِرُ وَلَا اَقْدِرُ وَتَعْلَمُ وَلَا اَعْلَمُ وَاَنْتَ عَلَّامُ الْغُيُوْبِ، اَللّٰهُمَّ اِنْ كُنْتَ تَعْلَمُ اَنَّ هٰذَا الْاَمْرَ خَيْرٌ لِّيْ فِيْ دِيْنِيْ وَدُنْيَايَ وَمَعَاشِيْ وَعَاقِبَةِ اَمْرِيْ وَعَاجِلِهٖ وَاٰجِلِهٖ فَحُزْهُ وَاَقْدِرْهُ لِيْ وَبَارِكْ لِيْ اَللّٰهُمَّ اِنْ كُنْتَ تَعْلَمُ اَنَّ هٰذَا الْاَمْرَ شَرٌّ لِّيْ فِيْ دِيْنِيْ وَدُنْيَايَ وَمَعَاشِيْ وَعَاقِبَةُ اَمْرِيْ وَعَاجِلِهٖ وَاٰجِلِهٖ فَاصْرِفْهُ عَنِّيْ وَاصْرِفْنِيْ عَنْهُ وَقَدِّرْ لِيَ الْخَيْرَ حَيْثُ كَانَ ثُمَّ ارْضِنِيْ بِهٖ يَا رَبَّ الْعٰلَمِيْنَ،

سُبْحَانَ رَبِّكَ رَبِّ الْعِزَّةِ عَمَّا يَصِفُوْنَ وَسَلَامٌ عَلَى الْمُرْسَلِيْنَ وَالْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ،

அல்லாஹ்வே, உன் ஞானத்தைக் கொண்டும், சக்தியைக் கொண்டும் பெரும் பாக்கியத்தை அருளும்படி இறைஞ்சுகிறேன். நாங்கள் அசக்தர்களாகவும் ஞான சூனியர்களாகவும் இருக்கிறோம். மறைவான யாவற்றையும் அறிந்தவன் நீதான். இறைவா! இந்தச் செய்கை

எனக்கு நல்லதாயின், என் இம்மை மறுமையின் கருமங்களுக்கு உகந்ததாயின் அதன் முழுப் பயனையும் ஏற்று அனுபவிக்கச் சக்தியை அளிக்குமாறு இறைஞ்சுகிறேன். மேலும், அதில் வளர்ச்சியைத் தந்தருள்வாயாக!

“இந்தச் செய்கை எனக்குத் தீங்கானதாக முடியுமாயின், என் இம்மை மறுமையை அதன் தீங்கு அணுகாதபடியும்இ நான் அதன் அருகே செல்லாமல் இருக்கும்படியும் கிருபை புரிவாயாக! எனக்கு நன்மையின் பக்கமே வழகாட்டி அதைக் கொண்டு நான் திருப்தியடையுமாறும் அருள் புரிவாயாக! “அவர்களின் வருணனைகளை விட்டெல்லாம் அப்பாலான பரிசுத்தமுடைய உமது இறைவனுக்கே சகல புகழும். அவன் அனுப்பிய முர்ஸலீன்களான தூதர்கள் அனைவர்கள் மீதும் சாந்தியும் சமாதானமும் உண்டாதவதாக. சர்வ புகழும் ரப்பில் ஆலமீனான அல்லாஹ்வுக்கே உரியது.“

இதன்பின் அன்றாட வாழ்க்கைக்குரிய அலுவல்களில் ஈடுபட விரும்பினால் கீழ்க்கண்ட துஆவை ஓதிவிட்டு ஈடுபடவும்.

اَللّٰهُمَّ وَجِّهْنِيْ فِيْ كُلِّ وِجْهَةٍ وَمَقْصَدِيْ فِيْ كُلِّ قَصْدٍ وَغَايَتِيْ فِيْ كُلِّ سَعْيٍ وَمَلْجَاءِيْ وَمَلَاذِيْ فِيْ كُلِّ هَمٍّ وَشِدَّةٍ

وَوَكِيْلِيْ فِيْ كُلِّ اَمْرٍ وَتَوَلَّنِيْ مَحَبَّةً وَّعِنَايَةً فِيْ كُلِّ حَالٍ،

அல்லாஹ்வேஇ சகல சன்மார்க்கத் துறைகளிலும் என்னைச் சங்கையுடன் ஈடுபடச் செய்தருள்வாயாக! எனது நாட்டங்களை முடித்துத் தருபவன் நீயே. இம்மை மறுமைகளில் சம்பவிக்கும் சகல விதமான துக்கம் துயரங்களிலிருந்தும் உன்னிடமே அடைக்கலம் புகுகிறேன். சகல நிலைமைகளிலும் செய்கைகளிலும் எனக்கு வழிகாட்டியாய்த் தோன்றி அன்பையும் அருளையும் பொழிவாயாக! ஆமீன்.

மேலும் சிறிது நேரம் சென்று லுஹாத் தொழுதபின் விருந்தாளியோடு உணவருந்து. விருந்தினர் இல்லாவிடில் உன் குடும்பத்தாரில் ஒருவருடன் உண்ண வேண்டும். சாதகன் தனியே உண்ணுதல் கூடாது. பிறகு “கைலூலா எனும் நித்திரை புரியலாம். (இது காலை பத்து மணி முதல் பதினொன்றரை மணிவரையுள்ள காலத்தில் தூங்குவதாகும். தஹஜ்ஜத் தொழுகையிலும் மற்றும் அதனைத் துயர்ந்த சாதனைகளிலும் ஈடுபடுவோர்க்கே இந்தத் தூக்கும் உரியது) லுஹரை முதல் நேரத்தில் ஜமாஅத்துடன் சேர்ந்து தொழுது கொள்ளவும். இதுபோன்றே அஸரையும் ஜமாஅத்துடன் தொழ வேண்டும். அதன்பின் கல்வத்திலிருந்து முஷாஹதா, முராகபாவுடன் வழக்கமான திக்றையும் மக்ரிபையும் இமாமுடன் தொழவும். பிறகு ஸூரத்து ஸஜ்தாவை ஒரு தடவை ஓதி அதன் பின்னும் இஷா வரை முஷாஹதா முராகபாவுடன் திக்றில் இருந்து இஷாவையும் ஜமாஅத்துடன் தொழவும். அதற்குப் பிறகு,

ஸூரத்துத் தபாரக்

குல்யா அய்யுஹல் காபிரூன

குல்ஹுவல்லாஹு

குல்அவூதுபி ரப்பில் பலக்

குல் அவூதுபி ரப்பின்னாஸ்

ஆமனர் ரஸூலு

லௌஅன்ஸல்னா

இவற்றை ஓதிக் கொண்டு, "அஸ்த:.பிருல்லா ஹல்லதீ லாஇலாஹ இல்லாஹுல் ஹையுல் கையூம்" என்று மும்முறை ஓதிக் கொண்டு நித்திரைக்குச் செல்லவும். மறுபடியும் இரவில் மூன்றில் ஒருபாகம் கழிந்ததும் எழுந்து முன் விபரிக்கப்பட்ட அனுஷ்டான முறைகளைக் கைகொண்டு வரவும்.

இங்கு நாம் எழுதிக் காட்டியுள்ள தொழுகை முறை குடும்பத்துடன் இல்லற வாழ்க்கை நடத்துபவர்களுக்கானதுதான். தனிமனிதனாக இருந்து சாதகத் துறையில்தான் கழிக்க வேண்டும். அப்படியானால்தான் தன்னை இல்லாதாக்கும் பனாவின் வடிவம் விரைவில் சித்தியாகும். இதனால்தான் "மரணிக்கும்முன் மரணமடைந்து விடுங்கள்" என்று நம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மொழிந்துள்ளனர். சாதகம் செய்கையில் இந்த"பனா" என்னும் வடிவத்தை ஒரு முறையேனும் அடையவேண்டுவது வாஜிபாகும். அந்நிலையடைந்து மரிப்பவனே ஹக்குல் எகீன் என்னும் தலத்தை எய்தியவனாவான். அத்தலத்தை அடைந்த பின்பே அவன் விழித்தவனாவான். "மானிடர்கள் உறக்கத்திலுள்ளனர்"(இவ்விதம் தம்மை அழித்துக் கொண்டு) இறந்தால் விழித்துக் கொள்வார்கள்" என்று நம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளது இதுதான். இதன் விளக்கம் வருமாறு:-

மேலே நாம் இர்பான் துறையில் விளக்கிய "பனா" படிவத்தை எய்துவதற்கு முன்னர், இவ்வுலகில் காணும் காட்சியாவும், தாத்பரியும் கூறக்கூடிய ஒரு கனவுக்குச் சமமாகும். "பனா"வுக்குப் பின்னரே விழிப்பு உண்டாகிறது. அப்போது அந்நிலையில்தான் சத்தியத்தின் உண்மை சொரூபத்தை காண முடியும் என்பது ஆரிபீன்களின் முடிவாகும். இவ்வுலகில் ஒரு மூமின் அந்த மாபெரும் "பனா"நிலை விழிப்பு அடையாவிடின், அவன் சுவர்க்கத்தில்தான் "கஸீப்" எனும் விழிப்பை அடைவான்.

எம் சகோதரர்கள் இலகுவாய் அன்றாட அனுஷ்டானங்களைப் புரிந்து கொண்டு செயலாற்றுவதற்காக இச்சிறு நூலை ஆக்கினோம். இதனைப் படிக்கும் பெரியார்கள் இதில் தவறுகளோ, பிழைகளோ கண்டால், தீர்க்க ஆராய்ந்து திருத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

எங்கள் ரப்பே, எங்கள் அனைவருக்கும் உன் மெஞ்ஞான அறிவைப் பெரிய அளவில் தந்து அருள் புரிவாயாக! ஆமீன்.

"இலாமுல் - பவாயித் - பீ – நிலாமுல் - அகாயித்"

*முற்றும்.*

www.sufimanzil.org